SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## முன்னோடி வினாத்தாள்

## மட்டம் III

# 303
# நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்
# (FCA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**303 - நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் (FCA)**

2020 **முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்** (Pilot Paper)

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்பதற்கு : 15 நிமிடம்

விடையெழுத : 03 மணித்தியாலம்

**வினாத்தாளின் கட்டமைப்பு:**

- இந்த வினாத்தாள் பகுதி A, பகுதி B, பகுதி C என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதிகள் A, B மற்றும் C யிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 20 |
| பகுதி B | 30 |
| பகுதி C | 50 |
| **மொத்தம்** | 100 |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இந்த வினாத்தாளில் சித்தியடைய 50% புள்ளிகள் பெறப்பட வேண்டும்.

**விடைகள்:**

- விடைகள் யாவும் தரப்படும் விடைப்புத்தகத்திலேயே எழுதப்பட வேண்டும் வினாத்தாளில் எழுதப்படும் விடைகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்கும் விடைகளை புதிய பக்கத்தில் ஆரம்பிக்கவும்.
- சகல செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓர எல்லைகளுக்கு உள்ளே எழுதவேண்டாம்.

**விடைப் புத்தகங்கள்:**

- ஒவ்வொரு விடைப் புத்தகத்தினதும் முகப்புப் பக்கத்தில் அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சர கணிதம் மற்றும் வகையீட்டு வசதிகளை கொண்டிராத கணிப்பான்களை உபயோகிக்கலாம். திட்டமிடப்படக்கூடிய கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொல் நிரல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லை கொண்டிருக்கும் (OTQ's தவிர்ந்த). வினாக்களுக்கான விடைகள் நிரலில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல்லின் பொருள்வரையறைகளுக்கு அமைய எழுதபபட வேண்டும்.

**கட்டாய வினாக்கள்**

**(மொத்தம் - 20 புள்ளிகள்)**

**பகுதி A**

### *வினா 01*

இலங்கையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனி ஒன்றின் கணக்கியற் பயிலுனரான நிரேஷ், நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளுக்கு நல்ல கூட்டிணைவு ஆளுமை (corporate governance) முக்கியமென அறிந்துள்ளார்.

நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளுக்கு நல்ல கூட்டிணைவு ஆளுமை முக்கியமாவதற்கு காரணங்களை நிரேஷ் அறிந்துகொள்ள விரும்புகின்றார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**(a)** நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளுக்கு நல்ல கூட்டிணைவு ஆளுமையின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** ***(03 புள்ளிகள்)***

**(b)** கூட்டிணைவு ஆளுமையின் நான்கு (04) கோட்பாடுகளை **குறிப்பிடுக.** ***(02 புள்ளிகள்)***

### *வினா 02*

இடர் முகாமைத்துவம் என்பது வியாபார அமைப்புகளின் ஒரு பிரதான அங்கமாக இருப்பதுடன், இடர் முகாமைத்துவத்தின் நோக்கம் முக்கியமான வியாபாரச் செயன்முறைகள் மற்றும் ஒவ்வொரு செயன் முறையினுள்ளும் காணப்படும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் இடர்களை குறைக்கும் நோக்கில் அமைப்பின் இடர்களை இனங்கண்டு ஆவணப்படுத்துவதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் வீதம் தந்து இடர்களை குறைப்பதற்கு கிடைக்கப்பெறும் இரண்டு (02) நுட்பங்களை **விபரிக்குக.** ***(05 புள்ளிகள்)***

### *வினா 03*

சஞ்சிகை ஒன்றிலிருந்து ரஷ்மி கீழ்வருவனவற்றை வாசித்தார்.

*"தற்கால உலகில் வியாபார அமைப்புக்கள் பல விடயங்களில் சுயாதீன உறுதிப்பாட்டினை பெறுவது முக்கியமாகின்றது. எனவே, தற்போது கணக்காய்வுச் சேவைபுரிவோர் பல உறுதிப்பாடு ஈடுபடுத்தல்களை மேற்கொள்கின்றனர்."*

ரஷ்மி உங்களிடம் கீழ்வரும் வினாக்களை கேட்கின்றார்:

(i) '*உறுதிப்பாடு* ஈடுபடுத்தல்' என்றால் என்ன?

(ii) 'நியாயமான உறுதிப்பாடு' மற்றும் 'வரையறுத்த உறுதிப்பாடு' ஆகிய இரண்டிற்குமிடையிலான வேறுபாடு என்ன?

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**(a)** '*உறுதிப்பாடு* ஈடுபடுத்தலினை' **பொருள்வரையறை செய்க**. ***(02 புள்ளிகள்)***

**(b)** நியாயமான உறுதிப்பாடு மற்றும் வரையறுத்த உறுதிப்பாடு ஆகிய இரண்டிற்குமிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக**. ***(03 புள்ளிகள்)***

## *வினா 04*

பட்டயக்கணக்கறிஞர் நிறுவனமான N&A அசோசியேட்ஸின் பிரதான செயற்பாடு, உறுதிப்பாட்டு சேவையை வழங்குவதாகும். இந்நிறுவனம் முகாமைப் பங்காளரால் முகாமை செய்யப்படுகின்றது. நிறுவனத்தை முகாமை செய்யும் முகாமைப் பங்காளர், ஈடுபடுத்தல்களில் தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி சகல பங்காளர்கள் மற்றும் ஊழியர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**(a)** N&A அசோசியேட்ஸில் தரத்திற்கான முகாமைப் பங்காளரின் பொறுப்புக்களை **விபரிக்குக.**

***(03 புள்ளிகள்)***

**(b)** தனித்தனி ஈடுபடுத்தல்களில் தரக்கட்டுப்பாட்டிற்காக கவனத்திற் கொள்ளவேண்டிய இரண்டு (02) கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைக் **குறிப்பிடுக.** ***(02 புள்ளிகள்)***

## *பகுதி A யின் முடிவு*

**மூன்று (03) கட்டாய வினாக்கள்** **பகுதி B**

***வினா 05***

**(A)** செனுரி, தொழில்சார் தோட்டச் சேவைகளை **வழங்கும் வ/ப கிரீன் (தனி) கம்பனியில் (கிரீன்)** புதிதாக இணைந்த பயிலுனர் கணக்காளர் ஆவார். **கிரீன்** வேறு உரிமங்களில் முதலீடுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை. 2019 டிசம்பர் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **கிரீன்** கம்பனியின் கணக்காய்வுக்கு தேவையான விபரங்களை சட்டநியதிக் கணக்காய்வாளருக்கு வழங்கி உதவுமாறு செனுரி கேட்கப்பட்டுள்ளார்.

செனுரியின் மனத்தில் கீழ்வரும் வினாக்கள் எழுந்தன:

(i) ஏன் கணக்காய்வாளர்கள் கம்பனிக்கு வெளியிலிருந்து நியமிக்கப்படுகினறனர்?
(ii) கணக்காய்வை மேற்கொள்வதற்கு ஏன் தொழில்சார் தீர்மானங்கள் தேவைப்படுகின்றன?

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேற்படி வினாக்களுக்கான விடைகளை செனுரிக்கு **விபரிக்குக.** **(04 புள்ளிகள்)**

**(B)** கணக்காய்வாளர்கள் கீழ்வரும் தகவல்களை கேட்டிருப்பதை செனுரி கவனித்துள்ளார்:

- 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்கள்
- 2019 க்கு அங்கீகரிக்கப்பட்ட பாதீடு
- **கிரீனின்** உள்ளகக் கணக்காய்வாளரால் வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள்
- தற்போதைய நிறுவனக் கட்டமைப்பு

இந்த தகவல்கள் எல்லாவற்றினதும் தேவைகள் பற்றி செனுரி கணக்காய்வுச் சிரேட்ட அலுவலரிடம் விசாரித்தபோது, இவை கணக்காய்வுத் திட்டமிடலுக்கு அவசியமானவை என அவருக்கு தெரிவிக்கப் பட்டது. கணக்காய்வாளர்கள் ஆவணப்படுத்தலில் காலத்தை செலவிட்டதையும் செனுரி அவதானித்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**(a)** நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வொன்றைத் திட்டமிடுதலின் முக்கியத்துவத்திற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** ***(03 புள்ளிகள்)***

**(b)** 'கணக்காய்வு ஆவணப்படுத்தலின்' மூன்று (03) மேலதிக நோக்கங்களை **விளக்குக.** ***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் – 10 புள்ளிகள்)***

***வினா 06***

**வ/ப குயிக் கப்ஸ் (தனி) கம்பனியின் ("குயிக்")** சட்டநியதிக் கணக்காய்வாளர் 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **குயிக்கின்** நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்குத் திட்டமிடுகிறார்.

ஒரு குடும்பத்திற்கு சொந்தமான இந்த **குயிக்** வியாபார நிறுவனத்தின் பணிப்பாளர்கள் அதன் பங்குதாரர்களாவர். **குயிக்** செல்லிடத் தொலைபேசிச் செயலி ஊடாக கிடைக்கப்பெறும் போக்குவரத்துச் சேவைகளை வழங்குகின்றது. **குயிக்கில்** பத்து (10) ஊழியர்கள் பணிபுரிவதுடன், அதன் தொழிற்பாடுகளை பங்குதாரர் அல்லாத பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) முகாமை செய்கின்றார். முன்னைய ஆண்டினது கணக்காய்வு அணியுடன் ஒப்பிடுகையில் கணக்காய்வுப் பங்காளர் தவிர்ந்த ஏனையோர் மாற்றப்பட்டு உள்ளனர்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**(a)** 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக **குயிக்கின்** கணக்காய்வாளர்கள் கடைப்பிடிக்கவேண்டிய இடர் மதிப்பீட்டு செயன்முறையினை **விளக்குக.** **(04 புள்ளிகள்)**

**(b)** உள்ளகக் கட்டுப்பாடுகள் அடங்கலாக, **குயிக்** கம்பனி மற்றும் அதன் சூழல்பற்றி விளங்கிக் கொள்வதற்கு **குயிக்கின்** கணக்காய்வாளர் மேற்கொள்ள வேண்டிய மூன்று (03) இடர் மதிப்பீட்டு நடைமுறைகளை **விபரிக்குக.** **(03 புள்ளிகள்)**

**(c)** வழுவிலும் பார்க்க மோசடியினால் பொருண்மையான பிறழ்கூற்று கண்டுபிடிக்கப்படாமை இடர் உயர்வாகக் காணப்படுவதற்கான மூன்று (03) காரணங்களை **இனங்காண்க.** **(03 புள்ளிகள்)**

## *வினா 07*

**(A)** ருக்மால், அரச உடமைக் கம்பனியான **வ/ப ஏசியா எயர் (தனி) கம்பனியின்** கணக்காளராவார். அறிக்கையிடப்பட்ட கம்பனி வளங்களின் துஷ்பிரயோகம் பற்றிய ஒழுங்குபடுத்தல் புலனாய்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

- ஒழுங்குபடுத்துனரால் புலனாய்வு நோக்கங்களுக்காக முன்னைய ஆண்டுகள் தொடர்பில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரத் திட்டம் மற்றும் பாதீடுகளை சமர்ப்பிக்குமாறு ருக்மாலிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

- பணிப்பாளர் சபையானது குத்தகைகள் (SLFRS 16) புதிய நியமங்களை கடைப்பிடிப்பதால் நிதியறிக்கையிடற் தேவைகளுக்காக தேவைப்படும் மாற்றங்களை அறிக்கையிடுமாறு ருக்மாலிடம் கேட்கப்பட்டிருக்கிறது. எனினும், புதிய நியமம் பற்றிய தெளிவான விளக்கத்தை ருக்மால் கொண்டிருக்கவில்லை.

இக் கோரிக்கைகளை நிறைவுசெய்வதால் தொழில்சார் கணக்காளர்களுக்கு பிரயோகிக்கப்படும் நெறிமுறைக் கோவையின் அடிப்படைக் கோட்பாடுகளை மீறுவதாகுமா என ருக்மால் சந்தேகம் கொண்டுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேலே விபரிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவு செய்வதன் மூலம் ருக்மால் நெறிமுறைக் கோவையின் அடிப்படைக் கோட்பாடுகளை மீறுகின்றாரா என **மதிப்பிடுக.** ***(04 புள்ளிகள்)***

**(B)** ஜயமினி பெரேரா என்பவர் கணக்காய்வு நிறுவனமான ரத்நாயக்க அன்ட் கம்பனியின் பங்காளர் ஆவார். அவர் கடந்த ஐந்து (05) ஆண்டுகளாக **வ/ப கலக்சி (தனி) கம்பனியின்** கணக்காய்வுப் பங்காளராக இருந்து வருகின்றார். அவரின் திறமைகள் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டுள்ள கலக்சியின் பணிப்பாளர் சபை, இன்னும் 6 மாதங்களில் ஓய்வுபெற திட்டமிட்டுள்ள கலக்சியின் தற்போதைய பிரதான நிதி அலுவலர் பதவி வெற்றிடத்திற்கு அவருக்கு அழைப்பு விடுத்தது. அந்தக் கோரிக்கைக்கு சாதகமாக பதிலளித்த அவர் எதிர்கால தொழில்தருனருடன் பேரம்பேசுவதில் ஈடுபட்டுள்ளார். அவர் இறுதி முடிவினை விரைவில் எட்டவுள்ளார். 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கலக்சியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு விரைவில் ஆரம்பமாக உள்ளது.

ஜயமினி கடந்த 8 ஆண்டுகளாக றியல் புறொப்பட்டீஸ் PLC யின் கணக்காய்வுப் பங்காளராக இருந்து வருவதுடன், கம்பனியின் கணக்காய்வுகளில் கொண்டிருந்த ஈடுபாட்டினை கௌரவிக்கும் வகையில் இந்தக் கம்பனி அபிவிருத்திசெய்த காணி ஒன்றினை கொள்வனவு செய்யும் பட்சத்தில் அவருக்கு 30% கழிவு அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**(a)** அடிப்படை நெறிமுறை கோட்பாடுகளுடனான ஒத்திசைவு தொடர்பில் ஜயமினி முகம் கொடுக்கும் அச்சுறுத்தல்களை **மதிப்பிடுக.**
***(04 புள்ளிகள்)***

**(b)** இந்த அச்சுறுத்தல்களை நீக்குவதற்கு அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்திற்கு குறைப்பதற்கு ரத்நாயக்க அன்ட் கம்பனி எடுக்கக்கூடிய நிறுவன ரீதியிலான இரண்டு தற்காப்பு நடவடிக்கைகளை**விபரிக்குக.**

***(02 புள்ளிகள்)***

## *பகுதி B யின் முடிவு*

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**

**(மொத்தம் - 50 புள்ளிகள்)**

**பகுதி C**

## *வினா 08*

**(A)** வ/ப ரெடி (தனி) கம்பனி, அண்மையில் சந்தையில் பிரவேசித்த உருக்குப் பொருட்களை உற்பத்திசெய்யும் நிறுவனமாகும். முதல் சில மாதங்களில் சந்தையில் இதன் தொழிற்பாடு நன்றாக இருந்தது. அதன்பின்னர் பொருட்களின் தரம் மற்றும் வினியோக காலம் தொடர்பில் நுகர்வோர் திருப்தி அடையாமையால் விற்பனையில் வீழ்ச்சியினை முகாமை அவதானித்தது.

கம்பனியின் பெறுகைச் (கொள்வனவு) செயன்முறை, தொக்குச் செயன்முறை மற்றும் கணக்கீட்டு முறைமை ஆகியவற்றில் பிரச்சினைகள் இருப்பதனை பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) கவனித்துள்ளார்.

***<u>பெறுகைச் செயன்முறை</u>***

கம்பனி தற்போது பொருட்களை பல வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்றது. உற்பத்தியில் பயன்படும் பிரதான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வழங்குனர் தெரிவுசெய்யும் செயன்முறையை கம்பனி கொண்டிருக்க வேண்டுமென பிரதான நிறைவேற்று அலுவலர் தெரிவித்தார். தெரிவுசெய்யப்படும் வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டுமென அவர் அழுத்திக் கூறியுள்ளார்.

பிரதான நிறைவேற்று அலுவலரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களுக்கு அமைய பெறுகை முகாமையாளர் சில வழங்குனர்களை இனங்கண்டிருப்பதுடன் இவ்வழங்குநர்களை மதிப்பீடு செய்வதற்காகப் பதிதாக பெறுகைக் குழுவொன்றை அமைத்திருந்தார். அத்துடன், பெறுகைச் செயன்முறையிலுள்ள வியாபார இடர்களைக் குறைக்கும் நோக்கில் பெறுகைச் செயன்முறையை முறைப்படுத்துவதும் (formalize) முக்கியமானதென அவர் தெரிவித்தார்.

***<u>தொக்குச் செயன்முறை</u>***

வ/ப ரெடி (தனி) கம்பனியின் முகாமை, தொக்குகள் வழங்கல்கள் பதிவுசெய்யப்படாமை காரணமாக தொக்குகளின் பௌதிகரீதியான எண்ணிக்கைகளுக்கும் தொக்குப் பதிவேட்டு மீதிகளுக்கும் இடையில் கணிசமான வேறுபாடுகள் இருப்பதனை அவதானித்தது. உற்பத்தி ஊழியர்கள் களஞ்சிய சாலைக்குச் சென்று உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை எடுத்துச் செல்கின்றனர். அதன் காரணமாக தொக்குப் பதிவேடுகளை புத்தூட்டல் செய்வதற்கு மூல ஆவணங்கள் கிடைப்பதில்லை. கம்பனி குத்தகைக்குப் பெற்ற கட்டிடத்தில் இயங்குவதுடன், அது தொக்குகளை களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சிய சாலைக்காக கணிசமான இடப் பரப்பினை ஒதுக்கியுள்ளது. கம்பனியின் தொக்குப் பராமரிப்பு தொடர்பில் கட்டுப்பாடுகளை கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தினை முகாமை உணர்ந்துள்ளது.

***<u>கணக்கீட்டு முறைமை</u>***

கம்பனி, ஊடுசெயல்களை பதிவுசெய்யவும் விற்பனை விலைப்பட்டியல்களை தயாரிக்கவும் கணக்கீட்டு முறைமை ஒன்றினை பயன்படுத்துகின்றது. விற்பனை முறைமை கம்பனியின் பொதுப் பேரேட்டுடன் ஒன்றிக்கப்பட்டுள்ளது. கீழ்வரும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன:

- இந்த முறைமையின் கீழ் விற்பனைகள் கம்பனியின் விற்பனை ஊழியர் மற்றும் நிதி ஊழியர்களால் பதிவு செய்யப்படுகின்றது. முறைமையில் பதிவுகளை மேற்கொள்ள அவர்கள் எல்லோரும் ஒரே கடவுச் சொல்லை (password) பயன்படுத்துகின்றனர்.
- முன்னைய மாதத்தில் ஒரு நாள் வைரஸ் தாக்கத்தின் காரணமாக முறைமை பாதிப்புக்கு உள்ளான போதிலும், முறைமையிலிருந்த தரவுகள் இழக்கப்படவில்லை.
- பிறப்பித்த சில விற்பனைச் சிட்டைகள் பொதுப் பேரேட்டில் பதிவு செய்யப்படாததுடன், சில வித்தியாசங்கள் இருந்ததைக் கம்பனியின் கணக்காளர் இனங்கண்டார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**(a)** கம்பனிக்கு வழங்குனர் தெரிவுச் செயன்முறை தேவைப்படுவதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக**. ***(04 புள்ளிகள்)***

**(b)** கம்பனியால் இனங்காணப்பட்ட வழங்குனர்களை மதிப்பீடு செய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நான்கு (04) காரணிகளை **அடையாளம் காண்க**.

***(04 புள்ளிகள்)***

**(c)** கம்பனியின் பெறுகைச் செயன்முறையில் காணப்படும் நான்கு (04) வியாபார இடர்களை (business risks) **விபரிக்குக.** ***(04 புள்ளிகள்)***

**(d)** மேலே விபரித்த தொக்குச் செயன்முறையில் காணப்படும் இரண்டு (02) பலவீனங்களையும், அவற்றை எவ்வாறு சீர்செய்ய முடியும் என்பதையும் **விபரிக்குக.**

***(04 புள்ளிகள்)***

**(e)** கம்பனித் தொக்குச் செயன்முறைமீது கட்டுப்பாடுகளை பிரயோகிப்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** ***(03 புள்ளிகள்)***

**(f)** மேலே அவதானித்த முறைமைப் பிரச்சினைகளை (system issues) கையாள்வதற்கு முகாமை மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை **ஆராய்க.** ***(06 புள்ளிகள்)***

## *வினா 09*

**(A)** வ/ப குட் ரயர் (தனி) கம்பனயானது, அது உற்பத்தி செய்யும் பொருட்களை பிரதானமாக வினியோகத்தர் வலையமைப்பின் ஊடாகவும் சில பொருட்களை நேரடியாக நிறுவனரீதியான வாடிக்கையாளருக்கும் விற்பனைசெய்யும் ரயர் உற்பத்திக் கம்பனியாகும். வினியோகத்தர்களுக்கு 30 – 60 நாட்கள் கடன் காலம் அனுமதிக்கப்படும். 2019 டிசம்பர் 31 மற்றும் 2018 டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் கடன்பட்டோர் மீதிகள் கீழ்வருமாறு:

| | **2019**<br>**ரூபா மில்லியன்** | **2018**<br>**ரூபா மில்லியன்** |
|---|---|---|
| நிறுவனரீதியான கடன்பட்டோர் | 50 | 55 |
| விநியோகத்தர்கள் | 250 | 178 |
| | **300** | **233** |

கம்பனியின் கணக்காய்வாளர்களின் பிரதான நோக்கம் கடன்பட்டோரின் இருப்பு மற்றும் மதிப்பீடு (existence and valuation) பற்றியதாகும். இருப்பு மற்றும் மதிப்பீடு பற்றிய இடர்களைப் பற்றி ஆய்வு செய்வதற்காக கணக்காய்வு அணியினர் கீழ்வரும் விதிமுறைகளை மேற்கொண்டனர்:

- தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்களை கோருதல்
- கடன்பட்டோரின் சேத இழப்புக்களை சோதித்தல்

கணக்காளர் மொத்தம் 114 கடன்பட்டோரில் ஆறு (06) கடன்பட்டோருக்கு கீழே காட்டப்பட்டுள்ள உறுதிப்படுத்தற் கடிதங்களை அனுப்பியிருந்தார். இது 2019 டிசம்பர் 31 இல் நிலுவையிலிருந்த மொத்தக் கடன்பட்டோர் மீதியின் 2% ஆகும். இந்த 6 கடன்பட்டோரும் கணக்காய்வு அணியினால் தெரிவு செய்யப்பட்டனர்.

*[முகவரி இடப்படுனர்*
*முகவரி]*

*திகதி: ..........*

*அன்பார்ந்த ஐயா*

*எமது கணக்காய்வாளரின் வேண்டுகோளின்படி, நீங்கள் எமக்குத் தருமதியான தொகையினை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். எமது பதிவேடுகளின்படி, இந்தத்தொகை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூற்றில் காட்டியவாறு ரூபா ____________ ஆக உள்ளது.*

*உங்கள் பதிவேடுகளின்படி இந்தத் தொகை இணங்கியிருப்பின், கீழே குறிப்பிட்ட இடத்தில் கையொப்பமிட்டு எமக்கு திருப்பி அனுப்பிவைக்கவும்.*

*உங்கள் பதிவேடுகளுடன் இந்தத் தொகை இணங்காதவிடத்து வித்தியாசத்தின் முழு விபரத்தினையும் தருக.*

*உங்கள் விசுவாசமான.*

*வ/ப குட் ரயர்ஸ் (தனி) கம்பனிக்காக*

*தொடர்பு இலக்கம். ------------*
*..............................................................................................................*
*எமது பதிவேடுகளின்படி, மேற்படி தொகை இணங்குகின்றது / இணங்கவில்லை.*

*பொறுப்புவாய்ந்த அலுவலரின் கையொப்பம் .........................*

மேற்படி கோரிக்கைக்கு எந்தவொரு கடன்பட்டோரும் பதிலிறுக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**(a)** வ/ப குட் ரயர்ஸ் (தனி) கம்பனியின் கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் கோரிக்கை செயன்முறையில் காணப்படும் இரண்டு (02) பலவீனங்களை **விபரிக்குக.** ***(04 புள்ளிகள்)***

**(b)** 2019 டிசம்பர் 31 இல் கடன்பட்டோர் மீதியின் இருப்பினை சோதிப்பதற்கு கணக்காய்வு அணி மேற்கொள்ளக்கூடிய இரண்டு (02) மாற்று விதிமுறைகளை **விபரிக்குக.** ***(03 புள்ளிகள்)***

**(B)** வ/ப சில்வர்லைன் அப்பரல்ஸ் (தனி) கம்பனி ("சில்வர்லைன்") ஆடைகளை ஏற்றுமதி செய்கின்றது. அது அதற்குத் தேவையான மூலப்பொருட்களை அதன் உறவுமுறை நிறுவனங்களிலிருந்து (Related entities) கொள்வனவு செய்கின்றது. அத்துடன், ஆடை உற்பத்தி தொடர்புபட்ட சில வேலைகள் அதன் உறவுமுறை நிறுவனங்களுக்கு வெளிமூலப்படுத்தப்பட்டுள்ளது (outsourced). கணக்காய்வுப் பங்காளர் சில்வர்லைனின் கணக்காய்வு அணியினரிடம் உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல் பற்றி போதிய பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**(a)** வ/ப குட் ரயர்ஸ் (தனி) கம்பனியின் உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களை இனங்கண்டு வெளிக்காட்டுவதற்கு பொறுப்பான தரப்பினர்பற்றி சிரேட்ட கணக்காய்வு அலுவலருக்கு **விபரிக்குக.** ***(02 புள்ளிகள்)***

**(b)** மேற்படி விடயம் தொடர்பில் மூன்று (03) காரணங்கள் தந்து சிரேட்ட கணக்காய்வு அலுவலருக்கு **விபரிக்குக** ***(03 புள்ளிகள்)***

**(c)** உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல் தொடர்பில் கணக்காய்வாளர் மேற்கொள்ளக் கூடிய மூன்று கணக்காய்வு விதிமுறைகளை **விபரிக்குக.** ***(03 புள்ளிகள்)***

## *வினா 10*

வ/ப மெகா டிரேடர்ஸ் (தனி) கம்பனியின் 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சட்ட நியதிக் கணக்காய்வாளராக M&B அசோசியேற்ஸ் நியமிக்கப்பட்டுள்ளது. மெகா கம்பனியின் சிரேட்ட கணக்காய்வு அலுவலர் கீழ்வரும் விடயங்களை கணக்காய்வுப் பங்காளர் மற்றும் முகாமையாளரின் அவதானத்திற்கு கொண்டுவந்துள்ளார்:

- மெகா பேணுகின்ற மூன்று வங்கிக் கணக்குகளுக்கு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை.
- கொடுப்பனவுகள் காசு மற்றும் காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. விற்பனைகள் காசு மற்றும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. காசுக் கொடுப்பனவுகளுக்கு வரையறை எதுவும் இல்லை. காசேடு, மெகா கம்பனியின் 2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் சகல ஊடுசெயல்களையும் (பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள்) பிரதிபலிக்கவில்லை.
- தொக்குகள் கொள்வனவு தொடர்பில் போதிய பதிவேடுகளை கம்பனி பராமரிக்கவில்லை.
- காசு ஊடுசெயல்கள் மற்றும் கொள்வனவுகளின் பூரணத்துவத்தை உறுதிசெய்ய கணக்காய்வு அணிக்கு மாற்று விதிமுறைகள் இல்லை. அத்துடன், 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்பில் கம்பனியின் விற்பனை, செலவுகள் மற்றும் கொள்வனவுகளின் பூரணத்துவம் பற்றி சந்தேகம் உள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**(a)** 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் வ.்.ப மெகா டிரேடர்ஸ் (தனி) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது முன்வைக்கப்பட்ட அபிப்பிராயத்தின் பொருத்தத் தனமைபற்றி **மதிப்பிடுக.**

***(04 புள்ளிகள்)***

**(b)** கணக்காய்வாளர் அறிக்கையில் உள்ள ‘‘விடய அழுத்தப் பந்தி’’ (emphasis of matter paragraph) என்றால் என்னவென **விபரிக்குக.**

***(03 புள்ளிகள்)***

**(c)** கணக்காய்வாளரின் அறிக்கையில் விடய அழுத்தப் பந்தி அவசியமாகின்ற இரண்டு (02) சந்தர்ப்பங்களை **விபரிக்குக.**

***(03 புள்ளிகள்)***

***பகுதி C யின் முடிவு***

## செயல் வினைச் சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக்கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | பகுப்பாய்வு செய்தல் (Analyze) | தீர்வினை அல்லது பேறினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங் களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | முடிவொன்றை அடையும் நோக்கில் விவாதம் மூலம் விபரமாகப் பரீட்சித்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காகப் ஆய்வு செய்தல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக (Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | தொடர்பாடுக (Communicate) | தகவல்களைப் பங்கிடுதல் அல்லது பகிர்தல் |
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றுதலும் | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | | எடுத்துக்காட்டுடன் விபரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | தயாரிக்குக (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்கள் மூலம் தீர்வு காணல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | வரைபுத்தாளில் வரைக (Graph) | வரைபடங்கள் மூலம் காட்டுதல் |
| | | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile) | வேறொன்றுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தல் | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக (Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret) | விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்துதல் |
| | | ஏற்பிசைவு செய்தல் (Recognize) | அறிவை அல்லது அது சார்ந்த அனுபவத்தைக் கொண்டு செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| அறிவு (1) | விடயங்களை ஞாபகப்படுத்தலும் அடிப்படை எண்ணக்கருக்களும் | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |
| | | அடையாளங் காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | | கூறுக / குறிப்பிடுக (State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாகத் தெரிவித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | | வரைக (Draw) | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |

**கட்டாய வினாக்கள்**

**(மொத்தம் - 20 புள்ளிகள்)**

**பகுதி A**

***வினா 01***

**அலகு 1 – வியாபாரச் சூழலும் ஆளுகைச் சட்டகமும்**

கற்கை வெளிப்பாடு – நிறுவனத்தின் ஆளுகைச் சட்டக பிரதான கூறுகளை இனங்காணுதலும், நிறுவன குறிக்கோள்களை அடைவதில் கூட்டிணைவு ஆளுகையின் முக்கியத்துவத்தை கலந்தாய்தலும்.

**(a)** அநேக தனியார் கம்பனிகளைப் போல அல்லாது, நிரற்படுத்திய கம்பனிகளின் உரிமையாளர்கள் / பங்குதாரர்கள் முகாமையிலிருந்து (பணிப்பாளர் சபை) வேறுபட்டிருப்பர். எனவே, பங்குதாரர்கள் பாதக நிலையில் இல்லாதிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனவே, இந்தக் கம்பனிகளை வழிநடத்தி கட்டுப்படுத்துவதற்கு நல்ல முறைமையொன்று இருத்தல் அவசியம். ***[03 புள்ளிகள்]***

**(b)**
- நாட்டதாரரின் நாட்டங்களை எண்ணத்தில் வைத்திருத்தல்.
- பங்குதாரர்களை சமமாக கையாள்தல்
- பணிப்பாளர் சபையின் வகிபாத்திரத்தை இனங்காணல்.
- நெறிமுறை நடத்தை
- வெளிப்படைத் தன்மை (Transparency)

***[ ½ புள்ளி வீதம் நான்கு கோட்பாடுகளுக்கு - 2 புள்ளிகள்]***

***வினா 02***

**அலகு 2 – இடர் முகாமைத்துவ சட்டகம்.**

கற்கை வெளிப்பாடு – இடர் குறைப்பில் பயன்படுத்தப்படும் நுட்பங்களை இனங்காணல்.

(i) இடர் தவிர்ப்பு – அதாவது இடர்களை தவிர்த்தல். இடரை தவிர்க்கமுடியுமா எனவும், அவ்வாறெனில் இடர் தவிர்ப்பு விரும்பக்கூடியதா எனவும் கவனத்திற் கொள்ளல்.
**உதா -:** தற்போதுள்ள நட்டம் ஏற்படுத்தும் வியாபார அலகினை மூடிவிடுதல்.

(ii) இடரை ஏற்றுக்கொள்ளல் – இடரினை கையாள்வதற்கு மேலும் நடவடிக்கை எடுக்காது இடரின் அளவை ஏற்றுக்கொள்ளல்.
**உதா -:** இயற்கை அனர்த்தம்

(iii) இடர் மாற்றல் – கொடுப்பனவு அல்லது வேறு நன்மைக்காக வேறொருவரிடமிருந்து இடரை ஏற்றுக்கொள்ள விரும்பும் ஒருவருக்கு இடரினை மாற்றுதல்.
**உதா-:** காப்புறுதிக் கம்பனியிலிருந்து காப்புறுதி பெறுதல்

(iv) இடர் குறைப்பு – இடர் தற்போது அதிக உயர்வாக இருந்து ஏற்றுக்கொள்ள முடியாது இருப்பதன் காரணமாக அதனை குறைக்கத் தீர்மானித்தல்.
**உதா -:** தொழிற்பாடுகளை பல்துறைப்படுத்தல்

***[2 இடர்களை இனங்காண 1 புள்ளி வீதம் – 2 புள்ளிகள்]***
***[விபரிப்பதற்கு 1 புள்ளி வீதம் – 2 புள்ளிகள்]***
***[உதாரணங்களுக்கு ½ புள்ளி வீதம் – 1 புள்ளி]***

*வினா 03*

**அலகு 4 – உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலும் தொடர்புபட்ட சேவைகள்**

கற்கை வெளிப்பாடு – உறுதிப்பாட்டுக் கோட்பாடு மற்றும் நியாயமான உறுதிப்பாட்டிற்கும் வரையறுத்த உறுதிப்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டினை விபரித்தல்.

**(a)** உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் என்பது குறிப்பிட்ட விடயம் தொடர்பில் சில தேர்வுநிபந்தனைகளுக்கு எதிராக பொறுப்புடைய தரப்பினர் தவிர்ந்த, ஏனைய கருதப்படும் பயனாளிகளுக்கு நம்பிக்கை மட்டத்தினை அதிகரிக்கும் நோக்கில் வடிவமைக்கப்படும் தொழில்சார் சேவை வழங்குனர் அபிப்பிராயம் அல்லது முடிவினை தெரிவிக்கும் ஈடுபடுத்தல் ஆகும். ***[2 புள்ளிகள்]***

**(b)** நியாயமான உறுதிப்பாடு என்பது (Reasonable assurance) 100% முழு உறுதிப்பாடு அல்லாத நியாயமான உயர் மட்ட உறுதிப்பாடு ஆகும். நியாயமான உறுதிப்பாட்டினை வழங்குவதற்கு ஏதுவாக கணிசமான பரீட்சிப்பும் மதிப்பாய்வும் தேவைப்படும். வரையறுக்கப்பட்ட உறுதிப்பாடு என்பது, நியாயமான உறுதிப்பாட்டிலும் விட குறைந்த மட்ட உறுதிப்பாடாகும். இது குறைந்த அளவிலான பரீட்சிப்பு மற்றும் மதிப்பாய்வினை அனுமதிக்கின்றது.

***[3 புள்ளிகள்]***

*வினா 04*

**அலகு 9 – நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்கான தரத் தேவைப்பாடுகள்**

கற்கை வெளிப்பாடு – நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்கு பிரயோகிக்கப்படும் தரக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகளை விபரித்தல்

**(a)** **தரத்திற்கான தலைமைத்துவ பொறுப்புக்கள்**

- நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டு முறைமைக்கு இறுதிப் பொறுப்பினை முகாமைப் பங்காளர் ஏற்கவேண்டும்.
- அவர் நிறுவனத்தினுள் தரமான கலாசாரமொன்றிற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பதுடன் நிறுவனத்தின் வியாபாரத் தந்திரோபாயத்தில் உட்பதிக்கப்பட வேண்டிய அவர்களுடைய செயற்பாடுகள் மற்றும் செய்திகளில் இந்தத் தரமான கலாசாரத்தை வழங்கவும் வேண்டும்.
- முகாமைப் பங்காளர் நிறுவனத்தினுள் தரத்தினைப் பேணுவதற்காக பொருத்தமான அனுபவம் மற்றும் அதிகாரத்துடன்கூடிய தனியாட்களை அல்லது தனியாட்களின் குழு ஒன்றினை நியமிக்க வேண்டும்.

***[1 புள்ளி வீதம் – 3 புள்ளிகள்]***

**(b)** **தனித்தனி ஈடுபடுத்தல்களின் தரக் கட்டுப்பாடு**

- வழிநடத்தில் (Direction)
- மேற்பார்வை (Supervision)
- மீளாய்வு (Review)

***[ஏதாவது இரண்டிற்கு 1 புள்ளி வீதம் – 2 புள்ளிகள்]***

***பகுதி A முடிவு***

**கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 30 புள்ளிகள்)

**பகுதி B**

***வினா 05***

| |
|---|
| **அலகு 5 – இடர் மதிப்பீடும் கணக்காய்வுச் செயன்முறையும்** |
| கற்றற் பேறு – சுயாதீன கணக்காய்வாளரின் ஒட்டுமொத்த நோக்கங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) அமைவாக கணக்காய்வினை நடத்துதலை விபரித்தல். |
| – கணக்காய்வுத் திட்டமிடல் மற்றும் கணக்காய்வு ஆவணப்படுத்தலை விபரித்தல். |

**(A)**

(i) கணக்காய்வின் நோக்கம் நிதிக்கூற்றுக்கள் சகல பொருண்மையான விடயங்கள் தொடர்பிலும் பொருத்தமான நிதியறிக்கையிடல் வேலைச் சட்டகத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றி சுயாதீன அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துவதற்கு இயலுமையை அளிப்பதாகும். எனவே, கணக்காய்வானது கிரீனிலிருந்து சுயாதீனமான, கிரீனுக்கு வெளியே உள்ள நிறுவனம் அல்லது நபரினால் மேற்கொள்ளப்படும். ***[2 புள்ளிகள்]***

(ii) நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை திட்டமிட்டு மேற்கொள்வதில் கணக்காய்வாளர் தொழில்சார் சுயதீர்ப்பினை பிரயோகிக்க வேண்டும். தொழில்சார் சுயதீர்ப்பு கீழ்வருவனவற்றிற்கு தேவைப்படும்:

- பொருண்மை மற்றும் கணக்காய்வு இடர்
- கணக்காய்வு நடைமுறைகளின் தன்மை, அளவு மற்றும் காலம்
- போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெறப்பட்டுள்ளனவா என்பது பற்றிய மதிப்பாய்வு
- கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் முடிவினை மேற்கொள்ளல்.

***[2 புள்ளிகள்]***

**(B)**

**(a) நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வினை திட்டமிடுவதன் முக்கியத்துவம்.**

- கணக்காய்வாளர் நிதிக்கூற்றுக்கள்மீது நியாயமான உறுதிப்பாட்டினை வழங்குதல் வேண்டும். இதற்காக கணக்காய்வாளர் பொருத்தமான அவதானத்தை செலுத்தவேண்டிய முக்கியமான பகுதிகளை தெரிந்துகொள்வது அவசியம்.
- பயனுறுதிமிக்க திட்டமிடலின் மூலம் கணக்காய்வாளர் பிரச்சினைகளை இனங்கண்டு ஒரு கால அடிப்படையில் அவற்றினை தீர்க்கக்கூடியதாக இருக்கும்.
- கணக்காய்வினை பயனுறுதிமிக்கதாக இருப்பதற்காக, பயனுறுதிமிக்க திட்டமிடலின் மூலம், கணக்காய்வாளர் கணக்காய்வினை உரியமுறையில் ஒழுங்குபடுத்தி முகாமை செய்யக்கூடியதாக இருக்கும்.
- இது பொருத்தமான அணி அங்கத்தினரை தெரிவுசெய்து, அவர்களுக்கு வேலைகளை ஒதுக்குவதற்கு உதவும்.
- திட்டமிடலானது விசேட கவனம் தேவைப்படும் முக்கியமான பகுதிகளை இனங்கண்டு கணக்காய்வுக்கு தேவையான வளங்களின் வழிப்படுத்தல், மேற்பார்வை, மீளாய்வினை வசதிப்படுத்தும்.

***[ஏதாவது 3 விடயங்களுக்கு 1 புள்ளி வீதம்]***

**(b) கணக்காய்வு ஆவணப்படுத்தலின் மேலதிக நோக்கங்கள்**

- ஆவணப்படுத்தலானது ஈடுபாட்டு அணியினர் கணக்காய்வினை திட்டமிட்டு மேற்கொள்ள உதவும். கணக்காய்வுத் திட்டம் போதுமான விபரங்களுடன் ஆவணப்படுத்தப்படும்போது அது திட்டமிட்டபடி கணக்காய்வினை நிறைவேற்ற உதவும்.
- மீளாய்வு செய்பவர் ஆவணப்படுத்திய வேலையினை மீளாய்வு செய்யக்கூடியதாக இருப்பதுடன், ஈடுபாட்டு அணியினர் மேற்கொண்ட வேலைகளிள் மேற்பார்வையையும் இலகுபடுத்தும்.
- தர மீளாய்வுத் தேவைகளுக்காக அறுதியிடக்கூடியதாக ஆவணப்படுத்தல் மேற்கொண்ட வேலைகளுக்கு சான்றாக அமையும்.
- ஆவணப்படுத்தப்பட்ட வேலையானது எதிர்காலத்தில் பார்வையிடுவதற்கு முன்கொண்டு செல்லக்கூடியதாக இருப்பதுடன், எதிர்கால கணக்காய்வுகளுக்கான முக்கிய தகவல்களின் பகுதியாகவும் அமையும். ***[ஏதாவது 3 விடைகளுக்கு 1 புள்ளி வீதம்]***

***வினா 06***

**அலகு 5 – இடர் மதிப்பீடும் கணக்காய்வுச் செயன்முறையும்**

கற்றற் பேறுகள்
– இடர் மதிப்பீட்டு நடைமுறைகளை பொருள்வரையறை செய்தலும் இடர் மதிப்பீட்டில் பயன்படுத்தப்படும் நடைமுறைகளை விபரித்தலும்

– மோசடி இடரினை பொருள்வரையறை செய்தலும் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் கண்டுபிடிக்கப்படும் மோசடிகளை தடுப்பதற்கான கணக்காய்வாளரின் பொறுப்பினை விபரித்தலும்

**(a) இடர் மதிப்பீட்டுச் செயன்முறை**

1. உள்ளகக் கட்டுப்பாடுகள் அடங்கலாக, உரிமம் மற்றும் அதன் சூழலை விளங்கிக் கொள்ள ஏதுவாக இடர் மதிப்பீட்டு நடைமுறைகளை மேற்கொள்ளல்.
2. மேலே (1) இல் பெற்ற விளக்கத்திற்கு அமைவாக நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றினை விளைவிக்கக்கூடிய வியாபார இடர்களை இனங்காணல்.
3. அத்தகைய வியாபார இடர்களுக்கு உரிமத்தின் பதிலிறுத்தலை மதிப்பாய்வு செய்து, அவற்றின் நடைமுறைப்படுத்தல் பற்றிய சான்றுகளை பெறுதல்.
4. உறுதிப்பாட்டு மட்டத்தில் பொருண்மையான பிறழ்கூற்று இடரினை மதிப்பிட்டு, இடர் மதிப்பீட்டின் அடிப்படையில் அவசியமான கணக்காய்வு நடைமுறைகளை தீர்மானித்தல்.

***[1 புள்ளி வீதம் – 03 புள்ளிகள்]***

**(b) குயிக் கம்பனியை விளங்கிக்கொள்வதற்கான இடர் மதிப்பீட்டு நடைமுறைகள்**

- முகாமை மற்றும் உரிமத்திலுள்ள பிறரிடம் விசாரித்தல்: பணிப்பாளர் சபை, CEO, ஊழியர் போன்றோரிடம். இதன் நோக்கம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட சூழலை விளங்கிக் கொள்வதாகும்.
- பகுப்பாய்வு நடைமுறைகள்: கணக்காய்வாளரின் விசேட அவதானத்தை தேவைப்படுத்தும் பகுதிகள் / நிதிக்கூற்று வரிசை உருப்படிகளை இனங்காண்பதற்காக எதிர்பார்ப்புக்களில் இருந்து விலகல்களை விளங்கிக்கொள்வதற்கு மேற்கொள்ளவேண்டிய இடர் மதிப்பீட்டு பகுப்பாய்வு நடைமுறைகள்.
- கணக்காய்வாளர் மூலமான அவதானிப்பு – பிறரினால் மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் அல்லது செயன்முறைகளை அவதானித்தல். உதா: பதிவுகள் எவ்வாறு முறைமையில் பதிவுசெய்யப்படுகின்றது என்பது பற்றி.
- பரிசீலித்தல்: வியாபாரத்தை பற்றிய விளக்கத்தை பெறுதல் மற்றும், இடர் மதிப்பீட்டுச் செயன்முறைக்கு அவசியமான வியாபாரத் திட்டங்கள் மற்றும் தந்திரோபாயங்கள், பதிவேடுகள் மற்றும் அகக் கட்டுப்பாட்டு கைநூல்கள் போன்ற ஆவணங்களை பரிசீலிக்க முடியும்.

***[1 புள்ளி வீதம் – 4 புள்ளிகள்]***

**(c) மோசடி இடர்கள்**

- மோசடிகள் அவற்றை மறைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட நுண்மையான திட்டங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம்.
- மோசடிகள் தனிநபர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டாக மேற்கொள்வதாக இருக்கலாம்.
- முகாமையானது, கணக்குப் பதிவுகளை மாற்றக்கூடிய அல்லது கட்டுப்பாடுகளை மீறக்கூடிய நிலையில் உள்ளதால், முகாமை மோசடிகளை கண்டுபிடித்தல் கடினம்.

***[3 புள்ளிகள்]***

***வினா 07***

| |
|---|
| **அலகு 8 – நெறிமுறைத் தேவைப்பாடுகள்**<br>கற்றற் பேறுகள் – அடிப்படைத் தத்துவங்களுடன் ஒத்திசைவுக்கான அச்சுறுத்தல்களை இனங்காணலும் இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களின் முக்கியத்துவத்தை மதிப்பாய்வு செய்தலும் |

**(A)** **(i) வியாபாரத் திட்டமும் பாதீடுகளும்** – இவை வியாபாரமொன்றின் அந்தரங்கத் தகவல்களாக கருதப்பட வேண்டும். தொழில்சார் கணக்காளர் என்ற ரீதியில் ருக்மால் நிறுவனத்தின் அந்தரங்க தகவல்களை வெளியாருக்கு வெளிப்படுத்தாது இருப்பதற்கான கடப்பாட்டினை கொண்டுள்ளார். எனினும், இந்தச் சந்தர்ப்பத்தில், புலன்விசாரணை ஒழுங்குபடுத்துநரால் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய வெளிப்படுத்தல் அனுமதிக்கப்பட்டதுடன், சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவை ஆகும். எனவே, தேவைப்படும் விபரங்களை சமர்ப்பிப்பது, ருக்மால் அந்தரங்க அடிப்படைக் கோட்பாட்டினை மீறியவர் என்ற நிலையினை ஏற்படுத்தாது.

***[2 புள்ளிகள்]***

(iii) **SLFRS 16 :** 'தொழில்சார் தகுதி' ஆனது, தொழில்சார் கணக்காளர்களுக்கான நெறிமுறைக் கோவையில் குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கோட்பாடாகும். ஈடுபடுத்தலினை திருப்திகரமாக நடாத்துவதற்கு ஏதுவாக, தகுதிவாய்ந்த ஆலோசனை மற்றும் உதவிகளை பெற்றாலன்றி, அங்கத்தினர் ஈடுபாட்டினை மேற்கொள்வதனை தவிர்த்தல் வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில், பணிப்பாளருக்கு அறிவிக்காது, தேவையான உதவி/பயிற்சி இல்லாது பணியினை மேற்கொள்ளல் அடிப்படைத் தத்துவமான தொழில்சார் தகுதியினை மீறுவதாக அமையும்.

***[2 புள்ளிகள்]***

**(B)** **(a) அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஒத்திசைவுக்கான அச்சுறுத்தல்**

**கலக்சி –** சுயநாட்ட அச்சுறுத்தல் (self-interest threat) ***[1 புள்ளி]***

ஜயமினிக்கு கலக்சியில் தொழில்வாய்ப்புப் பெறுவதற்கு நாட்டம் உள்ளது. அவர் கணக்காய்வு வாடிக்கையாளருடன் தொழில்வாய்ப்புப் பற்றி பேச்சுவார்த்தை நடத்திவருகின்ற அதேவேளை தற்போது கணக்காய்வுப் பங்காளராக இருக்கின்ற அவர் கணக்காய்வுப் பங்காளராக தொடருதல் அவரின் சுயாதீனத்திற்கு பங்கம் விளைவிக்கும். (தரப்பட்ட தகவல்களில் அவர் பணியிலிருந்து விலகியுள்ளாரா என குறிப்பிடவில்லை). ***[1 புள்ளி]***

**நிஜ ஆதனம் –** அவர் நிரற்படுத்திய கணக்காய்வு வாடிக்கையாளருடன் நீண்டகால தொடர்பினை கொண்டுள்ளார். நிரற்படுத்திய கணக்காய்வு வாடிக்கையாளருடன் கொண்டுள்ள நீண்டகால தொடர்பின் காரணமாக அவர் பழக்க அச்சுறுத்தலுக்கு (familiarity threat) ஆளாவதுடன், இது இலாபகரமான, பொருண்மையான நிதிசார் நன்மைகளை வழங்குவதற்கு வழிவகுத்தது. நீண்டகால தொடர்பு காரணமாக வாடிக்கையாளர் நாட்டத்திற்கு அவர் இரக்கம் காட்டக்கூடும்.

***[2 புள்ளிகள்]***

**(b) பாதுகாப்பு ஏற்பாடுகள்**

- கணக்காய்வு வாடிக்கையாளருடன் தொழில்வாய்ப்பினை ஏற்றுக்கொள்வது தொடர்பில் நிறுவனரீதியான கொள்கைகளும் நடைமுறைகளும் விருத்திசெய்யப்பட வேண்டும். இதில் கணக்காய்வுப் பங்காளர் அல்லது கணக்காய்வு ஊழியருக்கு கணக்காய்வு வாடிக்கையாளர் தமது நிறுவனத்தில் இணையுமாறு அழைப்பு விடுக்கும்போது கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் பற்றி தெரிவித்தல் வேண்டும். இது யாருக்கு தெரிவிக்க வேண்டும், எப்போது தெரிவிக்க வேண்டும், எவ்வாறான அனுமதிகள் தேவைப்படும் என்பனவற்றை உள்ளடக்க வேண்டும். இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களை கையாள்வதற்கு நிறுவனம் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் (உதா: பங்காளராகவோ அல்லது அணி அங்கத்தவராகவோ தொடர்ந்தும் சம்பந்தப்படாது இருத்தல்.)
- நிறுவனரீதியாக பிரதான ஊழியர் மற்றும் பங்காளரை சுழற்சிமுறையில் ஈடுபடுத்தல். சுழற்சிக் காலம் நிரற்படுத்திய கம்பனிகள் மற்றும் நிரற்படுத்தாத நிறுவனங்களுக்கு வேறுவேறாக வரையறை செய்யப்படலாம்.
- அன்பளிப்புக்கள் / நன்மைகளை ஏற்றுக்கொள்வதற்கு நிறுவன ரீதியான கொள்கைகளை அறிமுகப்படுத்துதல். பெறுமதி எல்லை, கணிசமான பெறுமதியுடைய அன்பளிப்புக்கள் வழங்கப்படும்போது கடைப்பிடிக்க வேண்டிய செயன்முறைகள் ஆகியன.

***[1 புள்ளி வீதம் இரு விடைகளுக்கு - 2 புள்ளிகள்]***

***பகுதி B முடிவு***

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**

**(மொத்தம் - 50 புள்ளிகள்)**

**பகுதி C**

***வினா 08***

**அலகு 3 – உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் வியாபார செயன்முறைகளும்**

கற்றற் பேறுகள் – வியாபார அமைப்புக்களின் ஒவ்வொரு வியாபார செயன்முறைகளையும் கலந்தாய்தல்.

- IT யிலுள்ள செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் போதுமானதன்மை பற்றி பகுப்பாய்வு செய்தலும் பரிந்துரைக்கப்பட்ட மேம்பாடுகளும்

**(A)**

**(a) வழங்குநர் தெரிவு**

(i) கம்பனி பல்வேறு வழங்குநர்களிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்கின்ற அதேவேளை, கம்பனி விலைப் பேரம்பேசலை விளைதிறனாக நடத்தமுடியாமலும், தொகையான கொள்வனவுக் கழிவுகளை பெறமுடியாமலும் இருப்பின் கிரயம் அதிகரிக்கும்.

(ii) வழங்குநரின் நம்பகத்தன்மை பற்றியும், தேவையான அளவினை உரிய நேரத்தில் வழங்குநர்களால் வழங்க முடியுமா என்பது பற்றியும் கம்பனியிடம் உத்தரவாதம் இல்லாதிருத்தல்.

(iii) வழங்குநர் தூர இடங்களில் இருந்து வழங்கல்களை செய்யின் தாமதங்கள் ஏற்படக்கூடும் என்பதுடன் இதன் விளைவாக உற்பத்தியும் தடைப்படும்.

***[2 புள்ளி வீதம் - 4 புள்ளிகள்]***

**(b) வழங்குநர் மதிப்பீடு**

- வழங்குநர் நம்பகத்தன்மை உடையவரா?
- பொருட்களை தேவையான அளவில் வழங்கும் இயலுமை உடையவரா?
- வழங்குநர் நிதிசார் ரீதியில் ஸ்திரத்தன்மை உடையவரா?
- வழங்குநர் முறிவடையும் (insolvent) இடர் உள்ளதா?
- வழங்குநர் தேவைப்படும் தர நியமங்களுக்கு அமைய பொருட்களை விநியோகிக்க முடியுமா?

***[1 புள்ளி வீதம், அதிகபட்சம் 4 புள்ளிகள்]***

**(c) பெறுகைச் செயன்முறையில் உள்ள வியாபார இடர்கள்**

- வழங்குநர் பொருட்களை வழங்க இயலாமை, அல்லது தேவையான அளவு வழங்க முடியாமை
- கம்பனி தேவைப்படாத பொருட்களுக்கு கட்டளையிடுதல்.
- வழங்குநரை சரியாக இனங்கண்டு பேரம்பேச முடியாதவிடத்து, பொருட்கள் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்படுதல்
- வழங்குநர் பொருட்களை உரிய காலத்தில் வழங்க முடியாதிருத்தல் அல்லது தரம்கெட்ட நிலையில் பொருட்களை வழங்குவதால் உற்பத்தித் தரத்தில் தாக்கம் ஏற்படுதல்.
- வழங்குநர் தவறான தொகைக்கு அல்லது கம்பனிக்கு விநியோகிக்கப்படாத பொருட்களுக்கு விலைப்பட்டியல் சமர்ப்பித்தல். இவை கண்டுபிடிக்கப்படாவிடில், கம்பனிக்கு மேலதிக கிரயத்தை விளைவிக்கும்.
- வழங்குநர் கட்டளையிட்ட அளவுக்கு அதிகமாக / குறைவாக பொருட்களை விநியோகித்தல். இது கம்பனிக்கு அதிக கிரயத்தை அல்லது உற்பத்தித் திட்டத்தில் தடங்கலை ஏற்படுத்தும்.

***[1 புள்ளி வீதம் அதிகபட்சம் 4 புள்ளிகள்]***

**(d) பொருட்களை வழங்குவதன் மீதான கட்டுப்பாடுகள்**

- அதிகாரமளிக்கப்பட்ட கோரிக்கையின்றி களஞ்சியசாலை பொருட்களை விநியோகிக்காது. இதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் அங்கீகரிக்கப்பட்ட MRN பயன்படுத்தப்படும்.

- சகல பொருள் வழங்கல்களும் தொடர் இலக்கமிட்ட, MIN இனால் சான்றுபடுத்தப்பட வேண்டும் என்பதுடன் பொருட்கள் பெறப்படும்போது பொறுப்புவாய்ந்த நபரினால் பெறுகை உறுதிப்படுதத்வும் வேண்டும்.

***[2 புள்ளிகள் வீதம் – 4 புள்ளிகள்]***

**(e) தொக்குச் செயன்முறை மீதான கட்டுப்பாடுகள்**

- தொக்குகளை வைத்திருப்பதால் கம்பனிக்குச் செலவுகள் ஏற்படும். எனவே, அவசியமான / உற்பத்தித் திட்டத்திற்கு தேவையான தொக்கு உருப்படிகள் மாத்திரம் கட்டளையிடப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய கட்டுப்பாடுகள் இருத்தல் வேண்டும்.
- போதிய தொக்குகள் இல்லாமல் ஏற்படக்கூடிய உற்பத்தித் தடைகளை தவிர்ப்பதற்காக சரியான நேரத்தில் பொருட்களை கட்டளையிடுவதற்கு கட்டுப்பாடுகள் இருத்தல் வேண்டும்.
- தரமான உற்பத்திக்கு மூலப்பொருட்களின் தரம் முக்கியமானது. எனவே, தரப் பிரச்சினைகள், வழங்குநர் விநியோகித்த பொருட்களின் குறைபாடுகள் ஆகியவற்றை இனங்காண்பதற்கும், காலாவதியான பொருட்களை விளைதிறனாக முகாமை செய்யவும் கட்டுப்பாடுகள் அவசியம்.

***[1 புள்ளி வீதம் – 3 புள்ளிகள்]***

**(f) முறைமைப் பலவீனங்கள்**

| பலவீனம் | பரிந்துரை / நடவடிக்கைகள் |
|---|---|
| இந்த முறைமையில் விற்பனை, விற்பனைத்துறை நபர் மற்றும் நிதித்துறை நபர்களால் பிறப்பிக்கப் படுவதுடன், முறைமையினுள் நுழைவதற்கு அவர்கள் யாவரும் ஒரே கடவுச்சொல்லை பயன்படத்துகின்றனர். | விலைப்பட்டியல் தயாரிப்பது தொடர்பில் பணிப் பகிர்வு இருப்பது அவசியம். விலைப்பட்டியல் கட்டகம் வரையறுக்கப்பட வேண்டும் என்பதுடன் அதற்கு கடவுச்சொல் பாதுகாப்பு செய்யப்பட வேண்டும். |
| முந்திய மாதத்தில் வைரஸ் தாக்கம் காரணமாக முறைமை ஒருநாள் ஒழுங்கற்று இயங்கியது. எனினும், முறைமையில் தரவு இழப்பு எதுவும் இடம்பெறவில்லை. | வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் நிறுவப்பட்டு இற்றைப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால தரவு இழப்புகளை தவிர்ப்பதற்காக காப்பு நகல் நடைமுறை நன்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| பிறப்பிக்கப்பட்ட சில விலைப்பட்டியல்கள் பொதுப் பேரேட்டில் பதிவுசெய்யப்படாது இருந்ததுடன், கம்பனிக் கணக்காளரினால் வித்தியாசம் இனம் காணப்பட்டது. | விதிவிலக்குகளை காட்டக்கூடியவாறு முறைமை திட்டமிடப்பட வேண்டும். கைமுறைக் கணக்கிணக்கக் கூற்றுகளுக்குப் பதிலாக விதிவிலக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் வகையில் முறைமை விருத்தி செய்யப்பட முடியும்.<br>[மொத்தங்களின் சுயகணிப்பீடு, குறுக்குச்செவ்வை ஆகியன ஏற்றுக்கொள்ளக்கூடிய விடைகள்.] |

***[2 புள்ளிகள் வீதம் – அதிகபட்சம் 6 புள்ளிகள்]***

***வினா 9***

**அலகு 6 – கணக்காய்வுச் சான்று**

கற்றற் பேறுகள் – கணக்காய்வுச் சான்றுகளை பெறுவதற்கு பயன்படுத்தப்படும் நடைமுறைகளை கலந்தாய்தல்.

- தொடர்புடைய தரப்பினரின் ஊடுசெயல்களுடன் இணைந்த இடரை மதிப்பிடுதல்

**(A)**

**(a) உறுதிப்படுத்தற் செயன்முறையின் பலவீனங்கள்**

(i) 6 மாதிரி எடுப்பு – இதற்கான அடிப்படையை விளங்க முடியவில்லை. கடன்பட்டோர் தொடர்பில் கவனத்தை ஈர்க்கின்ற ஒரு பகுதியான இதில் ஏன் 6 பேர் இருக்கின்றனர்

(ii) உறுதிப்படுத்தல் கோரிக்கைகள் கணக்காய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை. அவை நேரடியாக வாடிக்கையாளரினால் அனுப்பிவைக்கப்படுகின்றன.

(iii) உறுதிப்படுத்தல் கோரிக்கை கடன்பட்டோர்/ விநியோகத்தர் எந்தத் திகதிக்கு முன்னதாக மீதிகளை உறுதிப்படுத்த வேண்டும், பதில் வித்தியாசம் உள்ளடங்கலாக நேரடியாக கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது போன்ற போதுமான விபரங்களை கொண்டிருக்கவில்லை.

(iv) கோரிக்கை தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடவில்லை.

***[2 புள்ளி வீதம் – 4 புள்ளிகள்]***

**(b) மாற்று நடைமுறைகள்**

- கடன்பட்டோர் இருப்பில் இனங்காணப்பட்ட இடரினை ஆராய்வதற்கு பிரதிநிதித்துவ மாதிரி ஒன்றினை தெரிவுசெய்து, பின்னைய தீர்ப்பனவுகளை செவ்வை பார்த்தல்.
- பின்னைய தீர்ப்பனவுகள் இல்லையெனில், சான்றாக அமையும் ஆவணங்கள், பொருள் விற்பனைக்கான சான்றுகள், பொருட்களின் ஏற்பு ஆகியவற்றினை செவ்வை பார்த்தல்.
- விநியோகத்தர் / கடன்பட்டோரின் மாதிரி ஒன்றினை தெரிவுசெய்து, அவர்களின் தொடர்பு விபரங்களை பெற்று, அவர்களிடமிருந்து நேரடியாக மீதியின் உறுதிப்படுத்தலை கோருதல்.

*[1.5 புள்ளி வீதம் அதிகபட்சம் 3 புள்ளிகள்]*

**(B)**

**(a)** உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் அவற்றை வெளிக் காட்டுவதற்கு வ/ப சில்வர் அப்பரல்ஸ் கம்பனியின் முகாமை பொறுப்புடையதாகும்.

*[2 புள்ளிகள்]*

**(b)** கீழ்வரும் காரணங்களினால் சகல உறவுமுறைத் தரப்பினாரையும் ஊடுசெயல்களையும் இனங்காணும் நிலையில் கணக்காய்வாளர்கள் இருக்க மாட்டார்:

- விதிப்பனவின்றி உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்கள் இடம்பெறுதல்.
- உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்கள் கணக்காய்வாளருக்கு சுய சான்றாக இருப்பதில்லை.
- கணக்காய்வாளர் நியாயமாக எதிர்பார்க்கமுடியாத தரப்பினருடன் ஏற்படுத்தும் ஊடுசெயலாக உறவுமுறைத்தரப்பினர் ஊடுசெயல்கள் இருத்தல்.
- ஊடுசெயல்களின் முழு கட்டுறுப்பு அல்லது அடக்கத்தில் தொடர்புமுறை ஊடுசெயல்களை மறைப்பதற்கு முகாமையினால் செயற்திறனான படிமுறைகள் எடுக்கப்படல்.
- நிறுவனக் கட்டமைப்பு சிக்கலானதாக இருத்தல்.

*[1 புள்ளி வீதம் அதிகபட்சம் 3 புள்ளிகள்]*

**(c)** உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்கள் மீதான கணக்காய்வு நடைமுறைகள்:

- நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட வேண்டிய உறவுமுறைத்தரப்பினருடன் ஊடுசெயல்கள் இடம் பெற்றுள்ளனவா என முகாமை மற்றும் பணிப்பாளர்களிடம் விசாரித்தல்.
- தெரிந்த உறவுமுறைத் தரப்பினர் பெயர்களை பெறுவதற்கு முன்னைய ஆண்டின் வேலைத்தாள்களை மீளாய்வு செய்தல்.
- பங்காளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் கூட்ட அறிக்கை மற்றும் பணிப்பளர்கள் நாட்டப் பதிவேடு போன்ற பிற உரிய சட்டநியதிப் பதிவேடுகளை மீளாய்தல்.
- பாரிய அல்லது வழமைக்கு மாறான கணக்குப் பதிவேடுகளை குறிப்பாக, நிதியறிக்கையிடற் கால இறுதியில் அல்லது அதனை அண்மித்த காலங்களில் ஏற்பிசைவுசெய்த ஊடுசெயல்களை மீளாய்தல்
- வருமதிக் கடன்கள், சென்மதிக் கடன்கள் மற்றும் வங்கி உறுதிப்படுத்தல்களை மீளாய்தல். அத்தகைய மீளாய்வானது பிணையாளர்கள் எவருமிருப்பின் உரிமத்துடனான அவர்களின் தொடர்பினை காட்டும்.
- ஊழியர் நன்மைக்காக தாபிக்கப்பட்ட சகல ஓய்வூதிய மற்றும் பிற நம்பிக்கைப் பொறுப்புக்களின் பெயர்களையும், அவற்றின் முகாமை மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பெயர்களை விசாரித்தல்.
- பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் பிற உரிமங்களுடன் கொண்டுள்ள தொடர்புகளை விசாரித்தல்.

*[1 புள்ளி வீதம் அதிகபட்சம் 3 புள்ளிகள்]*

*வினா 10*

| |
|---|
| **அலகு 7 – கணக்காய்வு அறிக்கையிடல்** |
| கற்றற் பேறுகள் – சுயாதீனக் கணக்காய்வாளர் அறிக்கையில் உள்ள அபிப்பிராயத்திற்கான திருத்தங்களை மதிப்பிடல் |
| - விடயப் அழுத்தப் பந்தியின் பயன்பாட்டை விவரித்தல் |

**(a) கணக்காய்வு அபிப்பிராயத்தின் பொருத்தத்தன்மை**

- வ/ப மெகா டிரேடர்ஸ் (தனி) கம்பனியின் 2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்பனை, கொள்வனவுகள் மற்றும் செலவுகளின் பூரணத்துவத்தினை உறுதிப்படுத்தும் நோக்கெல்லை வரையறையினை கருத்திற்கொண்டு முனைப்பழி அபிப்பிராயத்தினை வழங்க கணக்காய்வுச் சிரேட்ட அலுவலர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

***[2 புள்ளிகள்]***

- எனினும், தரப்பட்ட தரவுகளின்படி, இந்த நோக்கெல்லை வரையறை வ/ப மெகா டிரேடர்ஸ் (தனி) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் தொடர்தேடல் தாக்கத்தை (pervasive impact) கொண்டு உள்ளது. இது நிதிக் கூற்றுக்களின் பல வரிசை உருப்படிகளை, அடிப்படையில் 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முழு வருமானக் கூற்று அல்லது முற்றடக்க வருமானக் கூற்றில் தொடர்தேடற் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

***[01 புள்ளி]***

- தொடர்தேடற் தாக்கத்தின் காரணமாக, வ/ப மெகா டிரேடர்ஸ் (தனி) கம்பனியின் 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராய மறுப்பினை (disclaim its opinion) தெரிவிப்பார்.

***[01 புள்ளி]***

**(b) விடய அழுத்தம் (Emphasis of matter)**

கணக்காய்வாளரின் சுயதீர்ப்புப்படி, நிதிக்கூற்றுக்கள் பற்றி பயனாளர்கள் விளங்கிக்கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட விடயம் முக்கியமென கருதும் பட்சத்தில், நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான வகையில் வெளிக்காட்டப்படும் அல்லது முன்நிலைப்படுத்தப்படும் குறிப்பிட்ட விடயங்களுக்கு பயன்படுத்துனர் தமது அவதானத்தை திருப்பவேண்டுமென கணக்காய்வாளர் தீர்மானிக்குமிடத்து அவர் விடய அழுத்தப் பந்தியொன்றினை கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்குவார். விடய அழுத்தப் பந்தியை உள்ளடக்குதல் கணக்காய்வு அபிப்பிராயத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தாது.

***[3 புள்ளிகள்]***

**(c) விடய அழுத்தப் பந்தி அவசியமாகக்கூடிய சந்தர்ப்பங்கள்**

- விதிவிலக்கான சட்ட வழக்காடல் அல்லது ஒழுங்குபடுத்துநர் செயற்பாட்டின் எதிர்கால வெளிப்பாடு தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்படல்.
- நிதிக்கூற்றுக்களில் தொடர்தேடல் தன்மையினைக் கொண்ட புதிய கணக்கீட்டு நியமம் ஒன்றின் அமுலுக்கு வரும் திகதிக்கு முந்திய பிரயோகம்.
- உரிமத்தின் நிதிநிலைமீது கணிசமான தாக்கத்தினைக் கொண்டிருந்திருக்கக்கூடிய அல்லது தொடர்ந்தும் கொண்டிருக்கும் பாரிய அழிவு.

***[1 ½ புள்ளி வீதம் ஆகக்கூடியது 3 புள்ளிகள்]***

## *பகுதி C இன் முடிவு*